# தூதன்

தூதன்-28 | மார்ச் 2019 | தூது-3

அதற்குப் பேதுரு: உமதுநிமித்தம் எல்லாரும் இடறலடைந்தாலும், நான் இடறலடையேன் என்றான். மாற்கு 14:29




Private Circulation only

தென்னிந்தியத் திருச்சபை, தமிழ் சபை - துபாய்

# தென்னிந்தியத் திருச்சபை
# தமிழ் சபை - துபாய்


| | |
|---|---|
| சபை போதகர் மடல் | 02 |
| ஆயரம்மா மடல் | 03 |
| ஆராதனை பாடல்கள் | 05 |
| உதவி போதகர் மடல் – ஃபுஜைரா | 06 |
| உதவி ஆயரம்மா மடல் | 08 |
| உதவி போதகர் மடல் – இராஸ் அல் கைமா | 10 |
| உதவி ஆயரம்மா மடல் | 12 |
| செயலர் மடல் | 14 |
| தெரிந்த சத்தியம் தெரியாத உண்மை | 16 |
| நோம்பு | 18 |
| நீங்கள் கிறிஸ்தவரா | 19 |
| திருச்சபை ஜெபநாள் | 20 |
| கிருபையின் பாத்திரம் | 22 |
| வேதவினா போட்டி | 24 |
| தெரிந்துகொள்வோம் | 26 |
| Health Tips | 28 |
| Children's Corner | 30 |
| Birthday Celebrants | 33 |
| Wedding Anniversary | 36 |
| A day in the Holy Temple - Part 3 | 37 |



P.O.Box: 8785, Dubai. Ph: 04-2552065, 04-2249249(office), Mob: 050-5533645
Website: www. csitamilparishdubai.com, E-mail: tamilcsi@eim.ae

# சபை போதகர் மடல்

கிறிஸ்துவுக்குள் எங்களுக்கு மிகவும் அன்பான திருச்சபை மக்களே, அருள்நாதர் இயேசுகிறிஸ்துவின் அன்பின் திருப்பெயரில் வாழ்த்துக்கள்.

2019-ம் ஆண்டின் மூன்றாம் மாதத்தில் கடந்து வந்துள்ளோம். ஆண்டவரின் மாறாத கிருபையின் கரம் நம்மை நடத்தி வந்த விதங்களை நினைவுகூர்ந்து நன்றி கூறுவோம். மீண்டும் ஒரு தவக்காலம் (Lent Days) நம்மைச் சந்திக்கின்றது. கிறிஸ்துவின் அன்பில் வளர, கிருபைகளைப் புரிந்துகொள்ள, மீட்பின் அனுபவங்களைப் புதுப்பித்துக்கொள்ள, ஆண்டவரின் திருவார்த்தைகளில் பெலப்பட கடவுள் மீண்டும் நமக்குத் தந்த இந்த நாட்களைச் சரியான விதத்தில் நாம் பயன்படுத்திக் கொள்வோம்.

இஸ்ரவேலே, நீ திரும்புகிறதற்கு மனதாயிருந்தால் என்னிடத்தில் திரும்பு என்று கர்த்தர் சொல்லுகிறார். எரேமியா 4:1

If you will return, O Israel return to me declares the Lord. Jeremiah 4:1

தவக்காலம் நம் ஆண்டவரிடத்தில் திரும்பும்படியாக நமக்குக் கொடுக்கப்படும் அறிவிப்பு அல்லது எச்சரிக்கை.

நாம் ஏன் கடவுளிடம் திரும்பவேண்டும்? Why should we turn to God?

- யோனாவைப்போல எதிரான பாதையில் பயணித்துக்கொண்டிருந்தால்
- எலியாவைப்போல ... விட்டுவிட்டு ஓடிக்கொண்டிருந்தால்
- பிலேயாமைப்போல தெய்வபயம் இல்லாமல் சுய எண்ணங்கள் ஆட்கொள்ளப்பட்டிருந்தால்
- சிம்சோனைப்போல பாவமான வாழ்விலேயே தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருந்தால்

நாம் கட்டாயமாக ஆண்டவரிடத்தில் திரும்பவேண்டியது அவசியம்.

நாம் எப்படி கடவுளிடம் திரும்பவேண்டும்? How should we turn to God?

யோவேல் தீர்க்கர் கூறுவது போல நாம் இப்பொழுதே உபவாசத்தோடும், அழுகையோடும், புலம்பலோடும், நம் முழு இருதயத்தோடும் ஆண்டவரிடத்தில் திரும்ப அழைக்கப்படுகிறோம். (யோவேல் 2:12). உடைந்த இருதயத்தோடும், உணர்வுள்ள மனதோடும், உண்மையான மனந்திரும்புதலின் அனுபவத்தோடும் கடவுளிடத்தில் திரும்பிட ஆண்டவர் நம்மை அழைக்கிறார்.

### நாம் கடவுளிடம் திரும்பும்போது என்ன கிடைக்கும்? What would we get when we turn to God?

லூக்கா 15:11-24 காணாமல் போன மகன் உவமையில் அவர் தன் தகப்பனிடத்தில் திரும்ப வந்தபோது, அவருடைய வரவுக்காக நித்தமும் காத்திருந்த தகப்பன் அவரைக் கட்டியணைத்து, முத்தமிட்டு, உயர்ந்த ரக ஆடைகளைக் கொடுத்து, மோதிரங்களை அணிவித்து, அவர் பொருட்டு பெரிய விருந்தை ஆயத்தப்படுத்தி மகிழ்வைக் கொண்டாடுவதுபோல, நம் பொருட்டும் கர்த்தர் மகிழுவார். மனந்திரும்பிய நம் நிமித்தமாக பரலோகத்தில் மிகுந்த மகிழ்ச்சியுண்டாகும்.

இத்தகைய மனந்திரும்புதலின் அனுபவங்கள் இத்தவக் காலங்களில் நம் வாழ்விலும் தொடர நம்மை அர்ப்பணிப்போம்.

ஆண்டவரின் அருட்பணியில்
உங்கள் ஆயர்
அருள்திரு.ஆ.விக்டர் பிரேம்குமார்.

# ஆயரம்மா மடல்

ஆண்டவரும் அருமை இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் அனைவரையும் வாழ்த்துகின்றேன். கடந்த மாதம் முழுவதும் கண்மணி போல் காத்த நம் தேவன், இனியும் வருகின்ற மாதத்திலும் நம்மைக் காக்க வல்லவராய் இருக்கிறார். அப்படிப்பட்ட நம் தேவனுக்கு துதிகளை, தோத்திரங்களை ஏறெடுப்போமாக.

"இந்த நாள் நற்செய்தி அறிவிக்கும் நாள்" 2 இராஜா.7:9

இதைப் படிக்கிற ஒவ்வொரு நாளும் நற்செய்தி அறிவிக்கும் நாள். எப்போதெல்லாம் நாம் இதைப் படிக்கிறோம். வருடத்திற்கு ஒருமுறை நாம் வேதத்தை படித்து முடிக்கிறவர்களாய் இருந்தால் வருடத்திற்கு ஒருமுறை இதைப் படிப்போம்.

ஆனால் நம் ஆண்டவர் தினமும் அதாவது பவுல் சொல்லுவதுபோல, "சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கி" என்பது போல, நாமும் அன்றாட வாழ்வில் யாரையெல்லாம் நாம் பார்க்கிறோமோ (கிறிஸ்துவை அறியாதவர்களை) அவர்களிடம் ஆண்டவரின் அன்பைச் சொல்லவேண்டும். அது நம்மேல் விழுந்த கடமை.

‘இந்த நாள் நற்செய்தி அறிவிக்கும் நாள்” என்று சமாரியாவில் இருந்துவந்த குஷ்டரோகிகள் சொன்னார்கள். சீரியருடைய பாளையத்தின் முண்ணனி மட்டும் வந்தபோது ஒருவரையும் காணாமல் இந்த செய்தியைப் பட்டணத்து வாசலில் இருக்கும் காவலர்களுக்கு அறிவித்தார்கள். அதன்படி ராஜா ஆள் அனுப்பி யோர்தான் மட்டும் அவர்களைத் துரத்தி ஓடினதை ராஜாவிற்கு அறிவித்து ஜனங்கள் போய் சீரியரின் பாளையத்தைக் கொள்ளையிட்டார்கள் என்று வாசிக்கிறோம்.

நற்செய்தி அறிவித்ததன் பயன்கள்:


1. குஷ்டரோகிகள் ஊருக்குள் வருவது தீட்டு, ஆனால் அவர்கள் தங்கள் உயிரைப் பணயம் வைத்து வந்து சீரியர்கள் இல்லை என்ற நற்செய்தியைக் காவலர்களுக்கு அறிவித்தார்கள்.

2. நல்ல செய்திகளை, தன் உயிரைப் பயணம் வைத்தாவது சொல்லவேண்டும் என்று தைரியமாய் ஊருக்குள் வந்தார்கள்.

3. அவர்களின் முதன்மையான நோக்கம் நற்செய்தி அறிவித்தல். ஆகவே மவுனமாய் இராமல் பொழுது விடியும் மட்டும் காத்திராமல் நற்செய்தியை அறிவித்தார்கள்.

இவர்கள் போல நாமும் சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் கர்த்தருடைய வசனத்தைப் போதிக்கிறவர்களாய் நாம் இருக்கவேண்டும். எவ்வளவு நாள் வாழ்ந்தோம், எப்படி வாழ்ந்தோம் என்பது முக்கியமல்ல. எவ்வளவு ஆத்துமாக்களை ஆதாயம் செய்திருக்கிறோம்? கடவுள் வரும்போது எத்தனை ஆத்துமாக்களை அவரிடம் கொண்டு சேர்ப்போம்? யோசித்துப் பார்ப்போம். செயல்படுவோம். இன்றே இரட்சண்ய நாள், இதுவே அனுக்கிரகத்தின் காலம். சிந்திப்போம், செயல்படுவோம்.

கிறிஸ்துவின் பணியில்
உங்கள் ஆயரம்மா
திருமதி.மேரி உமா விக்டர்.




**சாம்பல் புதன்கிழமை ஆராதனை**

**06-03-2019** அன்று
இரவு 8:00 மணிக்கு
E4 Hall-ல் நடைபெறும்.

# ஆராதனை பாடல்கள் - மார்ச் 2019

## பாமாலை - கீர்த்தனை

| | |
|---|---|
| ஆராதனை ஆரம்ப கவி | பாமாலை 7 - எங்கும் நிறைந்த |
| ஆராதனை இறுதி கவி | கீர்த்தனை 32 - மங்களம் சதா |

| | | |
|---|---|---|
| **01-03-2019** | | |
| பாமாலை | 5 | உம்மைத் துதிக்கிறோம் |
| பாமாலை | 119 | ரட்சா பெருமானே |
| கீர்த்தனை | 141 | கிருபை புரிந்தெனை ஆள் |
| கீர்த்தனை | 144 | தேவனே நான் உமதண்டையில் |
| பாமாலை | 172 | ஆத்துமாவே |
| **06-03-2019** | | |
| பாமாலை | 63 | இந்த அருள் காலத்தில் |
| பாமாலை | 65 | நாற்பது நாள் இராப்பகல் |
| கீர்த்தனை | 105 | ஐயையா நான் வந்தேன் |
| கீர்த்தனை | 159 | என் சிலுவை எடுத்து |
| கீர்த்தனை | 110 | பாவியாகவே வாரேன் |
| **08-03-2019** | | |
| பாமாலை | 1 | அநாதியான கர்த்தரே |
| பாமாலை | 16 | போற்றும் போற்றும் |
| பாமாலை | 137 | எந்தன் ஜீவன் இயேசுவே |
| | | என்னை மறவா |
| | | தம் கிருபை பெரிதல்லோ |
| | | ஜெபத்தைக் கேட்கும் எங்கள் தேவா |
| **15-03-2019** | | |
| பாமாலை | 103 | எவ்வண்ணமாகக் கர்த்தரே |
| பாமாலை | 114 | என் மீட்பர் இரத்தம் சிந்தினார் |
| கீர்த்தனை | 11 | சரணம் நம்பினேன் இயேசுநாதா |
| கீர்த்தனை | 56 | இயேசுவின் நாமமே திருநாமம் |
| கீர்த்தனை | | பயணிகள் பாதையில் |
| **22-03-2019** | | |
| பாமாலை | 17 | மகா அதிசயங்களை |
| | | பாவம் என்னைத் தொடர்ந்தாலும் |
| பாமாலை | 97 | கர்த்தாவை நல்ல பக்தியாலே |
| கீர்த்தனை | 121 | விசுவாசியின் காதில்பட |
| கீர்த்தனை | 40 | இவரே பெருமான் |
| கீர்த்தனை | 17 | தோத்திரம் செய்வேனே |
| **29-03-2019** | தமிழிசை வழிபாடு | |

# உதவி போதகர் மடல்

## வாக்குத்தத்த செய்தி

### சீர்வாழ்வு மலரும்

நமக்கு நற்சீர் உண்டாகும்படி, தம்முடைய சொந்தக் குமாரனையே கொடுத்த பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

பாபிலோன் சிறையிருப்பினிமித்தம், இஸ்ரவேலர்களின் ஆவிக்குரிய வாழ்வு சீர்கெட்டுப்போனது. அப்போது பாபிலோன் சிறையிருப்பிலிருந்து எருசலேமுக்கு வந்த எஸ்றா என்னும் வேதபாரகனை, இஸ்ரவேலரின் ஆவிக்குரிய வாழ்வை (spiritual life) வேதத்தின் அடிப்படையில் சீர்செய்யும்படி, தேவன் எழுப்பினார். அவன் கர்த்தருடைய கற்பனைகளின் வார்த்தைகளிலும், கட்டளைகளிலும் படித்துத் தேறினவனாயிருந்தான். (எஸ்றா 7:10,11).

இந்த லெந்து காலமும், நம்முடைய ஆவிக்குரிய வாழ்வை, வேதத்தின் அடிப்படையில் சீர்செய்யும்படி, தேவனால் ஏற்படுத்தப்பட்ட காலமாயிருக்கிறது. இந்த லெந்து நாட்களில், ஆண்டவருடைய சித்தத்தை அறிந்து, அதற்கு மனப்பூர்வமாய் நம்மை ஒப்புக்கொடுக்கும்படி தேவன் எதிர்பார்த்து நிற்கிறார். நாம் மனப்பூர்வமாய் ஒப்புக்கொடுக்கும்போது, நிச்சயமாக, தேவன் நம்மைச் சீரடையச் செய்வார்.

1. வரமனம் இல்லாதவர்கள்:

பாபிலோனிலிருந்து எஸ்றாவோடே கூட இஸ்ரவேலுக்குப் போகும்படி புறப்பட்டு வந்த இஸ்ரவேலர்கள், அகாவாவுக்கு ஓடுகிற நதியண்டையிலே மூன்று நாள் தங்கினார்கள். அப்போது உபவாசமிருந்து ஜெபிக்கும்படி, எஸ்றா, ஜனங்களையும், ஆசாரியரையும் பார்வையிடும்போது, லேவியின் புத்திரரில் ஒருவரையும் காணவில்லை (எஸ்றா 8:15). ஏனெனில் லேவியின் புத்திரரில் ஒருவரும், எருசலேமுக்குப் போவதைத் தெரிந்துகொள்ள மனமற்றவர்களாய் இருந்தார்கள். மாத்திரமல்ல, எழுபது வருடம், எருசலேமுக்கு அந்நியனாயிருந்ததினிமித்தம், தேவாலய பணிவிடைகள், ஜெபங்கள், பாடல்கள், பலிமுறைகள், சட்டதிட்டங்கள், ஒழுங்குகள் போன்ற அனைத்தும் லேவியருக்கு மறந்தும்போயிற்று.

அப்படிப்பட்ட சூழ்நிலையில், தேவனுடைய ஆலய பணிவிடை வேலைகளைச் சீரமைக்கும்படி, லேவியரை அழைக்க, எஸ்றா, சில புத்திமான்களை (எஸ்றா 8:16) அனுப்புகிறான். அப்போது லேவியர், தங்களைக் குறித்த தேவசித்தமாகிய தேவாலய பணிவிடை செய்யும்படி புறப்பட்டு வந்தார்கள். தேவனும் வேறு எந்த கோத்திரத்தையும் ஆள் அனுப்பி கூப்பிடவில்லை. ஏன் லேவியரைக் கூப்பிட்டாரென்றால், லேவியரைத் தம் கிருபையினால் அழைத்த அழைப்பு மாறாதது என்பதால்தான். (ரோமர் 11:29).

இன்று ஆண்டவரிடம் வர மனமில்லாதவர்களாயிருக்கும் நம்மையும், பரத்திலிருந்து வந்த ஞானமாகிய (யாக்.3:17) இயேசுகிறிஸ்து அழைக்கிறார். ஞானம் கூப்பிடுகிற சத்தத்துக்குச் (நீதி. 8:1) செவி கொடுப்போம். அவரிடம் மனம்மாறி வருவோம். தம் கிருபையினாலும், சத்தியத்தாலும் நம்மைச் சீர்செய்யும் தேவனுடைய கிரியையைக் காண்பாம்.

### 2. கட்டளையை மீறினவர்கள்:

எருசலேமுக்கு வந்த எஸ்றாவிடம், பிரபுக்கள் வந்து, “இஸ்ரவேலில் இருந்தவர்கள் நியாயப்பிரமாணத்தின்படி நடவாமல், மற்ற ஜாதிகளோடு சம்பந்தம் கலந்துவிட்டார்கள்” என்ற வர்த்தமானத்தை அறிவித்தார்கள் (எஸ்றா 9:1,2). இப்படி தேவகட்டளையை மீறின செய்தியைக் கேட்டதும், எஸ்றா, துக்கித்து, அழுது, பாவ அறிக்கை செய்தான் (எஸ்றா 9:5). இப்படி எஸ்றா, அறிக்கையிட்டு தேவனுடைய ஆலயத்துக்கு முன்பாக தாழவிழுந்து கிடக்கையில், ஜனங்களும் மிகவும் அழுதார்கள் (எஸ்றா 10:1). ஜனங்கள் அழுது, தங்கள் பாவங்களை அறிக்கையிட்டதுமன்றி, தங்களின் அந்நிய மனைவி, பிள்ளைகளையும் அகற்ற முன்வந்தார்கள் (எஸ்றா 10:11,12).

நாம், நம்முடைய வாழ்வில், எத்தனைமுறை தேவகட்டளையை மீறி செயல்பட்டிருக்கிறோம் என்பதை தேவசமூகத்தில் கண்ணீரோடு நினைவு கூர்ந்து அறிக்கையிடுவோம். வசனத்தை மீறி, எவைகளோடெல்லாம் நமக்குத் தொடர்பு இருக்கிறது? தேவன் விரும்பாத தொடர்புகளைத் துண்டிக்க அழுகையோடு கர்த்தரிடம் திரும்புவோம் (எஸ்றா 10:1). உலகத்தார், அவிசுவாசிகள் செய்யும் கிரியைகள் எல்லாம் இன்று நம்மிடமும் உண்டு. இதையெல்லாம் அகற்றிப் போடுவோம். புதிய உடன்படிக்கையைப் புதுப்பித்து வாழ்வு பெறுவோம்.

உங்களுக்காக ஜெபிக்கும்,
அருள்திரு. ஆல்வின் பிரைட்.
உதவி போதகர்.

# உதவி ஆயரம்மா மடல்

இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்.

## சிந்திக்க ஒரு சிறுகதை

தன் நாட்டை நீதியாய் ஆண்டுவந்த ரொம்ப நல்ல அரசன் ஒருவர் இருந்தார். அவரது குடிமக்களுக்குள்ளிருந்த ஒரு கெட்ட மனிதன் தன் எதிரியை வெட்டிக் கொலைசெய்து போட்டான். நீதிமன்றத்திற்குக் கொண்டுவரப்பட்ட அவனுக்கு நீதிபதிகள் மரணதண்டனை விதித்தனர். தூக்கிலிட நாளும் குறிக்கப்பட்டது.

அரசன் இந்த வாலிபனுக்காக மிகவும் துக்கித்து அவனுக்கு வாழ்வளிக்க விரும்பினார். ஒருவேளை அவனுக்கு ஆலோசனையளித்து மன்னிப்பு அருளினால் அவன் திருந்திவிடலாம் என்று எண்ணினார். ஆகவே அரசன் அவனுக்கு மன்னிப்புக் கடிதமெழுதி ஒரு போதகரைப்போல வேடமணிந்துகொண்டு அவனைச் சந்திக்க சிறைச்சாலைக்குச் சென்றார். அந்த வாலிபன் அடைக்கப்பட்டிருந்த அறைக்குச் சென்று அவனுக்கு ஆலோசனை அளிக்கத் துவங்கினார்.

அந்த வாலிபன் சீறினான். போதகர் உடையிலிருந்த அரசனைப் பார்த்து கெட்டவார்த்தைகள் சொல்லி திட்டிக் கத்தினான். “போதகர்கள் எல்லாரும் ஏமாற்றுக்காரர்கள், போய்விடு இங்கிருந்து” என விரட்டினான். அரசன் அவனை அமைதிப்படுத்தி பேச முயன்றார். அவனோ கேட்க ஆயத்தமாயில்லை. அரசன் துக்கத்தில் மூழ்கினார். மெல்ல திரும்பிச் சென்றுவிட்டார். அரசன் வெளியே சென்றதும் காவல்காரன் உள்ளே ஓடிவந்து, “அரசன் என்ன சொன்னார்?” என வாலிபனிடம் கேட்டான்.

“அரசரா? எந்த அரசர்?” வாலிபன் குழம்பிப்போய்க் கேட்டான். “போதகரைப்போல வேடமணிந்துகொண்டு உனக்கு மன்னிப்புக் கடிதத்தை எடுத்துக்கொண்டு வந்தாரே, அவர்தான்” என்றான் காவல்காரன். வாலிபன் அதிர்ச்சியடைந்துபோய் தலையில் கைகளை வைத்துக்கொண்டு உட்கார்ந்துவிட்டான். கிடைத்த தருணத்தை நழுவவிட்டுவிட்டானே. அதற்காக அவன் சாகவேண்டும்.

அவன் செத்துப்போனான். கொலை செய்ததினால் அல்ல, அரசனின் ஆலோசனையையும், மன்னிப்பையும் ஏற்றுக்கொள்ளாததினால்.

இஸ்ரவேல் மக்களும் வனாந்திர வழியாய்ப் பயணித்தபோது, பாவம் செய்ததினிமித்தம் விஷப் பாம்புகளை தேவன் அனுப்பினார். அவை கடித்து பலர் மாண்டார்கள். மோசே தேவனிடம் கதறியபோது அவர், "ஒரு வெண்கலப் பாம்பைச் செய்து அதைத் தூக்கி வை. பாம்பு கடித்தவன் எவனும் இந்த வெண்கலப் பாம்பை ஏறிட்டுப் பார்த்தால் பிழைப்பான். விஷம் அதன் வலுவை இழந்துவிடும்" என்றார்.

அப்படியே மோசே ஒரு வெண்கலப் பாம்பைச் செய்து அதை உயர்த்தி நிறுத்தினர். பலர் அந்தப் பாம்பை ஏறிட்டுப் பார்த்து உயிர் பிழைத்தனர். நோக்கிப் பார்க்காதவர்கள் மரித்தனர். பாவம் செய்ததினால் அல்ல, வெண்கலப் பாம்பை ஏறிட்டுப் பார்க்காததினாலேயே. நாம் பாவம் செய்ததற்காக அல்ல, நாம் இயேசுவை நோக்கிப் பார்க்காத காரணத்திற்காகவே நரகம் செல்கிறோம். வேஷம் மாறிவந்த அரசனைப்போல தேவன் நம்மைப் பலவிதங்களில் சந்திக்கிறார். ஒரு புத்தகம், பாடல், நபர் அல்லது ஒரு பிரசங்கத்தின் மூலமாக. நாம் நமது தலைகளை வணங்கி ஆண்டவருடைய மன்னிப்பை ஏற்றுக்கொள்ளவேண்டும். அப்படியானால் நாம் சாகத் தேவையில்லை, என்றென்றுமாய் வாழலாம்!

இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டு தூக்கி நிறுத்தி வைக்கப்பட்டார். நம்முடைய பாவத்திற்காக இயேசுகிறிஸ்து சிலுவையில் மரித்து கல்லறையிலிருந்து உயிரோடே எழும்பினார் என்று நம்பும்போது, நாம் அவர் பிள்ளையாகலாம். மோட்சத்திற்கும் செல்லலாம்.

வேதவாசிப்புப் பகுதி : எபேசியர் 2:1-10
மனப்பாட வசனம் : எபேசியர் 2:8

உங்களுக்காக ஜெபிக்கும்
திருமதி.ஜெனி.ஃ.பர் ஆல்வின்,
உதவி ஆயரம்மா.

## NEW MEMBERS LIST

| S. No. | NAME | MEM. NO. | AREA |
|---|---|---|---|
| 1 | Mr. Jaison Paul | 2825 | Dubai |
| 2 | Mr. Maher Salal J. | 2826 | Dubai |
| 3 | Mr. J.David Rajinikanth | 2827 | Dubai |
| 4 | Mr. Jayakumar Ebenizer | 2828 | Dubai |

# உதவி போதகர் மடல்

சிலுவை சுமந்து பாடுகளை ஏற்ற இரட்சகர் இயேசுகிறிஸ்துவின் தூய பெயரில் மிக மகிழ்வுடன் உங்களை வாழ்த்துகிறேன்.

மார்ச் மாதமாகிய புதிய மாதத்தின் நமது வாழ்வு பயணத்தில் ஆண்டவர் ஒவ்வொரு நாளும் துணை நிற்பார். கடந்து வந்த பாதைகளில் கர்த்தர் அருளிய நன்மைகளுக்காக நன்றி சொல்லுவோம், ஸ்தோத்தரிப்போம்.

இம்மாதத்தில் நாம் லெந்து காலத்தினைச் சந்திக்கின்றோம். லெந்து காலம் (lent) அல்லது தவக்காலம் கிறிஸ்தவ வாழ்வில் தனித்துவமிக்க ஒரு காலம். ஆன்மீக வாழ்வில் துளிர்விடும் அனுபவங்கள் தோன்றும் காலம். அதாவது, நாம் நமது வாழ்வைத் திருப்பிப் பார்க்கவும், தவறுகளைக் கண்டறியவும், அவைகளை விட்டுவிடவும், கர்த்தரோடும், மனிதரோடும், படைப்புகளோடும் ஒப்புரவாகுதலின் வழியாகச் சரி செய்ய, ஆன்மீக வாழ்வை புதுப்பித்துக் கொள்ளும் காலம். இத்தகைய புதுப்பித்தலுக்குச் சிலுவையின் மாதிரியே அடித்தளமாக விளங்குகிறது. இந்த லெந்து காலத்தில் நமக்காகத் தியாகமான இயேசுவின் சிலுவைப் பாடுகளை தினமும் தியானித்து வாழ்வோம்.

திருமறைப்பகுதி : கலாத்தியர் 6:12-18 தியான வசனம் : கலாத்தியர் 6:14
திருவசன தியான தலைப்பு : சிலுவையின் மேன்மை Boasting in the cross

"நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங்குறித்து மேன்மை பாராட்டாதிருப்பேனாக..."

"May I never boast except in the cross of our Lord Jesus Christ"

வரலாற்றில் சிலுவை ஒரு அவமானத்தின் சின்னம். கொடுமையான மரணதண்டனையின் சின்னம். ரோமப் பேரரசின் காலத்தில் சிலுவை குற்றவாளிகளைத் தண்டிக்கும் ஓர் கொலைக்கருவி.

சிலுவையில் இயேசுநாதர் தம்மையே கொடுத்ததால் சிலுவை மகத்துவமானது. 1 கொரி.1:18-25-ல் "சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது."

தூய பவுல், "இயேசுகிறிஸ்துவின் சிலுவையைத் தவிர வேறொன்றையுங் குறித்து மேன்மை பாராட்டமாட்டேன்" என்கிறார். கல்வி, செல்வம், புகழ் இவற்றைவிட சிலுவைதான் மேன்மையானது என்பதை பரிசுத்த பவுல் அனுபவித்து, அதனை தன் வாழ்வாக்குகிறார். இயேசுகிறிஸ்து ஏற்ற சிலுவை எந்நிலைகளில் மேன்மையானதாகக் கருதப்படுகிறது என்பதனைத் தொடர்ந்து தியானிப்போம்.

1. சிலுவை வாழ்வை ஒப்புரவாக்குவதினால் மேன்மையாகிறது. எபேசியர் 2:16 “பகையைச் சிலுவையினால் கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீரமாகத் தேவனுக்கு ஒப்புரவாக்கினார்” 'and in this one body to reconcile both of them to God through the cross, by which he put to death their hostility'.

பரிசுத்த பவுல் இறைப்பணி ஆற்றிய காலத்தில் யூதர்களுக்கும், பிற இனத்தாருக்கும் உள்ள பிளவு ஒன்று சேர்க்க முடியாததாக இருந்தது. யூதர்கள் தங்களை உடன்படிக்கையின் மக்கள் என்றும், இறைவனால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள் என்றும் தங்களுக்கென்று இறைவன் கொடுத்த சட்டம் உள்ளது என்றும் பெருமைப்பட்டனர்.

பிற இனத்தாருக்கு இந்த மூன்றில் எந்த பங்கும் இல்லை. இந்த இரு இனத்தாரும் ஒன்றுபட்டு வாழ்வது என்பது சாத்தியமில்லை என்னும் நிலை காணப்பட்டது. நாளுக்கு நாள் பகை பெருகி பெரியவர்-சிறியவர், தாழ்ந்தவர்-உயர்ந்தவர் என்னும் பிரிவு ஏற்பட்டது.

இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணம், உயிர்த்தெழுதல் மூலம் பகை தீர்க்கப்பட்டுள்ளது. (எபேசியர் 2:14-16). இயேசுகிறிஸ்து பகையைச் சிலுவையில் கொன்று இருதிறத்தாரையும் ஒன்றாக்கினார் என பவுலடியார் கூறுகிறார். நமது வாழ்விலும் சிலுவையை மேன்மையானதாகக் காண்போம்.

2. சிலுவை வாழ்வை உயர்த்துவதால் மேன்மையாகிறது. பிலிப்பியர் 2:9 “தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி” 'God exalted him to the highest place'

வெறுமை, அடிமை, கீழ்படிதல், இக்குணங்கள் இயேசுகிறிஸ்துவில் காணப்பட்டதால், உயர்வைப் பெற்றுக்கொண்டார். பிலிப்பியர் 2:10-ல் வானோர், பூதலத்தோர், பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கு மதிப்புமிக்கவர் ஆனார். பிதாவானவருக்கு மைந்தனாகிய கிறிஸ்து கீழ்ப்படிந்தார். இதுதான் உயர்வுக்கு முதற்படி. மனிதன் இறைவனுடனும், உடன் வாழ்பவருடனும், இயற்கையோடும் நல்ல தொடர்பு வைத்திருப்பது அவசியம். கலாத்தியர் 6:14-ல் கூறியதுபோல், “நானும் உலகத்திற்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறேன்” என்ற எண்ணத்தோடு அனைவருக்கும் நாம் தியாகம் செய்ய கர்த்தர் விரும்புகிறார். நிறைவாழ்வையும், உயர்வையும் நம்மால் பெற்றுக்கொள்ள இயலும்.

இந்த லெந்து காலத்தில், நம்மைச் சுயஆய்வு செய்து, சரியான பாதையில் பயணிக்க, இந்நாட்களின் இறைவேண்டலும், சிலுவைப்பாடுகளின் தியானமும் போதுமானதாகக் காணப்படும். நமக்காகச் சிலுவைப்பாடுகளை ஏற்ற இயேசு உங்கள் வாழ்வை உயர்த்துவாராக, ஆசீர்வதிப்பாராக.

கிறிஸ்துவின் திருப்பணியில்
Rev.M.Rajesh Kumar.
உதவி போதகர்.

# உதவி ஆயரம்மா மடல்

இயேசுகிறிஸ்துவின் இனிதான நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். நமது பற்றுறுதி வாழ்வைப் புத்தாக்கம் செய்ய கர்த்தர் அருளியதுதான் தவக்காலம். இந்நாட்களில் இயேசுவின் சிலுவைப்பாடுகளைச் சிந்தித்து, அவர் கற்றுத்தந்த மாதிரி வாழ்வு வாழ நம்மை புதுப்பித்துக் கொள்வோம்.

## நற்செயல் புரியும் வாழ்வு

திருமறைப்பாடம் : மத்தேயு 26:6-13 மைய வசனம் : மத்தேயு 26:10b

"என்னிடத்தில் நற்கிரியை செய்திருக்கிறாள்"

குடும்பத்தில், திருச்சபையில், சமூகத்தில் பெண்களின் பங்களிப்பு சிறந்து விளங்குகிறது. பெண்களின் பங்களிப்பு இயேசுகிறிஸ்துவின் ஊழிய நாட்களிலும் சிறந்து விளங்கியது. அன்று பெத்தானியா கிராமத்தில் குஷ்டரோகியாயிருந்த சீமோன் இல்லத்தில் இயேசுவுக்கு விருந்து கொடுக்கப்பட்டது. சிறப்பு நிகழ்வுகளில் விருந்து முக்கிய பங்களிக்கிறது. "விருந்து சந்தோஷத்துக்கென்று செய்யப்படுகிறது" (பிரசங்கி 10:19). அந்த விருந்து நேரத்தில் ஒரு ஸ்திரீ தனித்து நின்று, இறை ஆற்றலோடு செய்த செயலைக் கண்டு இயேசு, "என்னிடத்தில் நற்கிரியை செய்திருக்கிறாள்" (மத்தேயு 26:10b) என்றார். அவள் செய்த நற்செயலைத் தியானிப்போம்.

### 1. உயர்வானதைக் கொடுத்தாள் (மத்தேயு 26:9a):

"ஒரு ஸ்திரீ விலையேறப் பெற்ற பரிமள தைலமுள்ள வெள்ளைக்கல் பரணியைக் கொண்டுவந்து தைலத்தை இயேசுவின் சிரசின்மேல் ஊற்றினாள். அதன் வாசனை பிறரை திரும்பிப்பார்க்க வைத்தது. அதைப் பார்த்த சீஷர்கள் "இந்த வீண் செலவு எதற்கு?" (மத்தேயு 26:8) என்று கூறுகின்றனர். இயேசுகிறிஸ்துவின் பார்வையில் இது வீண் செலவாய் தெரியவில்லை. அதுமட்டுமல்ல இதை "உயர்ந்த விலைக்கு விற்றிருக்கலாமே" (மத்தேயு 26:9a) என்ற கருத்து அவள் உயர்வானதைக் கொடுத்தாள் என்பதை நாம் அறிந்துகொள்ள முடிகிறது. அவள் இயேசுவுக்கு சிரசில் ஊற்றிய தைலம் வாசனை வீசியதுபோல நம் செயல்கள் இயேசுவின் அன்பை பிறர் அறியும் அளவிற்கு வாசனை வீசவேண்டும். இதுதான் நாம் இயேசுவுக்குக் கொடுக்கும் உயர்வான செயல் என்பதை புரிந்து கொள்வோம். நம்மை மீட்க தன் உயிரையே தந்த இயேசுவுக்கு உயர்வானதை நாமும் கொடுப்போம்.

### 2. உரிய நேரத்தில் செய்தாள் (மத்தேயு 26:11b):

இயேசுகிறிஸ்து தன் மரணத்தை பல சந்தர்ப்பங்களில் சீஷர்களுக்கு எடுத்துரைத்தார். ஆனால் சீஷர்கள் புரிந்துகொள்ள காலதாமதமானது. இந்த ஸ்திரீ இயேசுவில் சார்ந்து வாழ்ந்ததால் ஆவியானவரின் செயல்பாட்டால் இயேசுவை தைலத்தால் அபிஷேகம் செய்தாள். சீஷர்கள் விமர்சிக்கும்போது இயேசுவே அவளுக்காகப் பரிந்துரைக்கின்றார். "நான் எப்போதும் உங்களிடத்தில் இரேன்" (மத்தேயு 26:11b). என்னை அடக்கம் பண்ண ஆயத்தமாக இவள் இதைச் செய்தாள். அந்த நேரம் செய்யாமல் இருந்திருந்தால் அந்த வாய்ப்பை இழந்திருப்பாள். நாம் நாட்களை நகர்த்திவிடாதபடி கர்த்தரை ஆராதிப்பதிலும், இறைமன்றாட்டிலும், ஏழைகளுக்கு உதவுவதிலும் நேரத்தைச் செலவிடுவோம். நாட்கள் பொல்லாதவைகளானபடியால் காலத்தை பிரயோஜனப்படுத்தி நற்செயல் புரிந்து வாழ்வோம்.

### 3. உன்னதரால் பாராட்டப்பட்டாள் (மத்தேயு 26:13):

இயேசுவின் சிரசில் பரிமளதைலம் ஊற்றினால் பலர் கேள்வி எழுப்புவார்கள் என்று அவளுக்குத் தெரியும். ஆனாலும் இயேசுவுக்காக அவர்மேல் கொண்ட அன்பின் நிமித்தம் எதைப்பற்றியும் கவலைப்படவில்லை. அவள் உள்ளத்தை அறிந்தவர் இயேசுகிறிஸ்து ஒருவர் மட்டும்தான். ஆகவேதான் இயேசு, இவள் என்னிடத்தில் நற்கிரியை செய்திருக்கிறாள் என்று புகழ்கின்றார். அதுமட்டுமல்ல, "இந்த சுவிசேஷம் உலகத்தில் எங்கெல்லாம் பிரசங்கிக்கப்படுமோ அங்கெல்லாம் இவள் செய்ததும் நினைவுகூரப்படும்" என்றார் (மத்தேயு 26:13). இயேசுவின் வார்த்தையின்படி அவள் உலகப்பற்றினை விட்டு உன்னதராகிய அவரைப் பற்றிக்கொண்டு நற்செயல் புரிந்ததால் உன்னதரால் பாராட்டப்பட்டாள்.

இயேசுகிறிஸ்துவின் மீட்பின் திருப்பணியில் தன்னிடம் இருந்த விலையுயர்ந்த தைலத்தை இயேசுவின் மரணத்தின் முன்னடையாளமாக அபிஷேகம் செய்த நிகழ்வு இன்றும் நினைவுகூறப்படுகிறது. ஆகவே நாமும் உயர்வானதைக் கொடுப்போம், உரிய நேரத்தில் கொடுப்போம், நற்செயல் புரிந்து உன்னதரின் பாராட்டைப் பெற்று அவர் உள்ளத்தில் என்றும் இடம்பிடிப்போம்.

கிறிஸ்துவின் பணியில்
திருமதி J.விஜிலா ராணி
உதவி போதகரம்மா.

# செயலர் மடல்

வழுவாதபடி நம்மைக் காத்து தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே நம்மை மாசற்றவராக நிறுத்த வல்லமையுள்ள நம்முடைய மகா உன்னதமான தேவனுடைய பரிசுத்த நாமத்தினாலே உங்களை வாழ்த்துகிறேன். நாம் அவருடைய இரக்கத்தைக் கெஞ்சி நம் நாட்களை அவருடைய சித்தத்தன்படி நடக்க கற்றுக்கொள்வோமாக.

பிப்ரவரி 8-ம் தேதியன்று, திருச்சபையாக நாம் சுற்றுலா சென்றுவர தேவன் கிருபைச் செய்தார். தேவன் கொடுத்த இந்த நல்ல ஐக்கியத்திற்காக தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். காஜா புயலினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்காக நாம் திருச்சபையாக வீடுகள் கட்டித்தர தீர்மானித்துள்ளோம். இதற்காகக் கொடுத்த, ஜெபித்த உள்ளங்களுக்காக நான் தேவாதி தேவனை ஸ்தோத்தரிக்கின்றேன். தொடர்ந்து பாதிக்கபட்ட மக்களுக்காக ஜெபிக்குமாறு அன்புடன் கேட்டுகொள்கிறேன்.

பிப்ரவரி 22-ம் தேதியன்று, நம் திருச்சபை சார்பாக இரத்ததான முகாம் Latifa மருத்துவமனையில் வைத்து நடைபெற்றது. இதில் பங்குபெற்று இரத்ததானம் செய்த நம் திருச்சபையின் அங்கத்தினர்களுக்கும், தன்னார்வத் தொண்டர்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது திருச்சபையின் சார்பாக விடுமுறை வேதாகம பள்ளி (VBS) மார்ச் மாதம் 15 முதல் 23 வரை தூய திரித்துவ ஆலய வளாகத்தில் நடைபெற உள்ளது. அதன் முன்பதிவு விண்ணப்பப்படிவம் (Registration Form) திருச்சபையின் வலைதளத்தில் (website) உள்ளது. சபையார் தங்கள் பிள்ளைகளின் விபரங்களை உடனடியாக பதிவுசெய்யுமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறேன். இவ்வருடம் இதன் இயக்குனராக இருந்து பொறுப்பெடுத்து நடத்த Mrs. Latha Rajan அவர்கள் முன்வந்துள்ளார்கள். அவர்களோடு இணைந்து செயல்படும் Scripture Union 8 Member குழுவுக்காகவும், ஆசிரியர்களுக்காகவும், தன்னார்வத் தொண்டர்களுக்காகவும் திருச்சபையார் ஜெபிக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இதில் நம் பிள்ளைகள் தங்கள் வாழ்க்கையை தேவனுக்காக முழுவதுமாக அர்ப்பணிக்கத்தக்கதான ஓர் அனுபவத்தை பெற்றுக்கொள்ள திருச்சபையார் அனைவரும் ஊக்கமாக ஜெபிக்கவும்.

இந்த மாதத்தின் அனைத்து நிகழ்வுகளுக்காகவும் விசேஷமாக, பரிசுத்தவார ஆராதனை அனைத்திற்காகவும் ஜெபிக்குமாறு உங்களை அன்போடு கேட்டுகொள்கிறேன்.

Jernaus Britto, Secretary.

## CHILDRENS CORNER FEBRUARY 2019

### Correct Answer Participants

### GRADE 3-5

1. Jeevanth Inbakumar
2. Jeshua Inbakumar
3. Driesson Davis Jeyakumar
4. Gladvin Joel
5. Trinita
6. Lenofa Joy
7. Ellena Shona
8. Efraiyn Rishon
9. Sanjay Sumesh
10. Abigail Jose

### GRADE 6-9

1. Edliyn Rishona
2. Gracelin Esther Suresh
3. J. Kelvin
4. Jeba Vincent Paul

### GRADE 9 & ABOVE

1. Jeyanth Inbakumar
2. Nickolyn Nixon
3. Shauna Kathy Jazlyn
4. K. Pearlwin Reginald
5. Jennifer Sherene Paul
6. Jerusha. R

## திருமறைப் பாட ஒழுங்குகள் - மார்ச் 2019

| நாள் | தியானப் பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்தி பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 01-03-2019 | தவக்காலம் மீட்பின் தருணம் | ஏசாயா 38:5-12 | ரோமர் 2:1-13 | யோவான் 5:1-9 | 6 |
| 06-03-2019 | சாம்பல் புதன் | 1 இராஜா. 17:8-16 | பிலிப்பியர் 2:1-11 | மாற்கு 8:31-38 | 102:1-15 |
| 08-03-2019 | பெண்கள் சிறப்பு வழிபாடு | எஸ்தர் 4:10-17 | அப்போ. 9:36-43 | மத்தேயு 26:1-13 | 98 |
| 15-03-2019 | பாவச் சுமையினின்று விடுவித்தல் | 2 சாமுவேல் 12:1-14 | அப்போ. 8:9-25 | மாற்கு 2:1-12 | 32 |
| 22-03-2019 | எல்லைகளைக் கடந்த விசுவாசத்தை அங்கீகரித்தல் | ஏசாயா 45:1-8 | அப்போ. 10:24-33 | மத்தேயு 15:21-28 | 125 |
| 29-03-2019 | அடக்குமுறை அமைப்புகளை உருமாற்றுதல் | நாகூம் 1:7-15 | அப்போ. 4:32-37 | லூக்கா 13:10-17 | 113 |

மோசே

தலைப்பிள்ளைச் சங்காரத்தின்போது எகிப்தில் பெரிய கூக்குரல் உண்டாயிற்று. ஒவ்வொரு எகிப்திய குடும்பத்தினரும் தங்களது குடும்பத்தில் மரித்த மூத்த பெண் பிள்ளையின் நிமித்தமும், மூத்த ஆண் பிள்ளையின் நிமித்தமும் கலங்கி அழுதனர்.

பார்வோனின் குமாரத்தியாகிய பாத்தியா தன்னுடைய தகப்பனாகிய பார்வோனுடன் அன்றிரவே மோசேயையும், ஆரோனையும் பார்க்கும்படியாக அவர்களது வீட்டிற்குச் சென்றாள். அப்பொழுது அவர்கள் மற்ற இஸ்ரவேல் புத்திரரோடே புசித்து, குடித்து மிகவும் களிப்புடன் இருப்பதைக் கண்டார்கள்.

அப்பொழுது பாத்தியா மோசேயை நோக்கி, "நான் உன்னை தூக்கி, வளர்த்து, என் கரத்தை உனக்கு நீட்டியதற்கு, இதுவா நீ எனக்கும் என் தகப்பன் குடும்பத்திற்கும் செய்யும் நன்றிகடன்?" என்றாள்.

அதற்கு மோசே அவளை நோக்கி, கர்த்தர் எகிப்தின் மீது பத்து வாதைகளை அனுப்பியபோது, உனக்கு ஏதாவது தீங்கு நேரிட்டதா? அவைகளில் ஏதாகிலும் ஒன்று உன்னை சேதப்படுத்தியதா? நீ உன் தகப்பனுக்கு முதற்பேரானவளாயிருந்தும், நீ மரிக்கவில்லையே! நீ எகிப்தின் நடுவில் இருந்தபோதும் ஒரு சேதமும் உன்னை அணுகவில்லையே என்றார்.

மோசேயின் வளர்ப்புத் தாயாகிய பாத்தியா மோசேயை நோக்கி, "எனக்கு என்ன பிரயோஜனம்? என் தகப்பனாகிய பார்வோன், என் சகோதரர் மற்றும் என் எகிப்திய குடும்பத்தினர் அனைவரும் தங்களது முதற்பேரானவைகளை இழந்து வாடும்போது, என்னால் எப்படி அதைப் பார்க்க முடியும்?" என்றாள்.

மோசே அவளை நோக்கி, "உன் தகப்பனும் அவனது வீட்டாரும், அவனது மக்களும் கர்த்தருடைய சத்தத்திற்கு செவி சாய்க்காதபடியால் அவர்கள் மேல் இந்த கொடிய வாதைகள் நேரிட்டது" என்றார்.

பார்வோன் மோசேயிடமும், ஆரோனிடமும் அவனோடிருந்த மற்ற இஸ்ரவேலரிடமும் சென்று அவர்களிடம் வேண்டிக்கொண்டது

என்னவென்றால், “நீங்கள் எழுந்து, உங்களது சகோதரரோடே, இந்த தேசத்தில் இருக்கிற எல்லா இஸ்ரவேலருடனும், உங்கள் ஆடு மாடுகளுடனும், பின்னும் உங்களுக்கு உண்டான எல்லாவற்றுடனும் செல்லலாம். மீதியாக எதையும் விட்டுவிட்டுச் செல்லவேண்டாம். எனக்காக மட்டும் உங்கள் கர்த்தரிடம் வேண்டுதல் செய்யுங்கள்” என்றான்.

மோசே பார்வோனை நோக்கி, “பயப்படாதே! நீ உன் தாய்க்கு முதற்பேரானவராயிருந்தும் நீ சாவதில்லை. நீ கர்த்தருடைய வல்லமையைக் காணும்படியாக உயிரோடே வைக்கப்பட்டுள்ளாய்” என்றார்.

பார்வோன் எகிப்திலுள்ள எல்லா இஸ்ரவேலரையும் எகிப்தைவிட்டு புறப்பட கட்டளைக் கொடுத்தான். எகிப்தின் மக்களும் தாங்கள் அழிந்து போகிறோம் என்று சொல்லி அவர்களை அனுப்பிவிட பெலன் கொண்டார்கள். இஸ்ரவேலருக்கு கர்த்தர் வாக்களித்தபடியே, அனைத்து எகிப்தியரும் தங்களுடைய அனைத்து விலையுயர்ந்த வெகுமதிகளைக் கொடுத்ததுமன்றி ஆடு மாடு மற்றும் விலைமதிப்பற்ற பல பொக்கிஷங்களையும் கொடுத்தார்கள்.

எகிப்தியர் அன்றிரவே அவர்கள் செல்லும்படி துரிதப்படுத்தினார்கள். ஆகவே இஸ்ரவேலர் அவர்களை நோக்கி, நாங்கள் என்ன திருடர்களா, இரவோடிரவாக செல்வதற்கு என்றார்கள். இஸ்ரவேலர் அவர்களிடம் பொன், வெள்ளி பாத்திரங்கள், மற்றும் ஆடை ஆபரணங்களைக் கேட்டு அவர்களைக் கொள்ளையிட்டார்கள். மோசே அவர்களை யோசேப்பின் உடல் வைக்கப்பட்டிருந்த பெட்டியை எடுத்துவர துரிதப்படுத்தினார். ஒவ்வொருவனும் தன்னுடன் தன் தன் தகப்பனாருடைய எலும்புகள் அடங்கிய பெட்டியையும், சுமந்து கொண்டு புறப்பட்டார்கள்.
தொடரும்...

நன்றி: யாசேரின் புத்தகம்.

தமிழாக்கம்: ஷீபா ரெஜினால்ட்

## வருந்துகிறோம்

"கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்"

நமது Fujairah கிளைச்சபையைச் சேர்ந்த
Mr.Selvaraj அவர்களின் சகோதரர்
Mr.Balamurugan அவர்கள் கடந்த 21-02-2019 அன்று
கர்த்தருக்குள் நித்திரை அடைந்துள்ளார்கள்.

# நோம்பு

உயிர்வாழ சுவாசம்
உணர்வைஆழ உபவாசம்
உயர்வுகொள்ள காத்திருப்பாம்
பிடித்துநிக்க துடிப்புவேண்டும்

உடலின் ஒடுக்கம்
உள்ளத்தின் விரிவாக்கம்
இடைவெளிகள் குறைவாக்கும்
இடைவிடாத் துதிப்பாகும்

நாப்பதுநாள் உபவாசம்
நாப்பூட்டுக்குள் சிறைவாசம்
காட்டுக்குள் நாட்டுஎண்ணம்
இயேசுகொண்ட உயர்நேசம்

பாத்திருந்த சாத்தானும்
தீட்டிவந்தான் சதித்திட்டம்
வார்த்தைகளால் வல்லஇயேசும்
உடைத்தெறிந்தார் அதேநேரம்

இயேசு ஏசாயா
யோவேல்சொல் சாட்சிகளாம்
ஆயுசு காலமெல்லாம்
மனுநீதியின் இனிமைகளாம்

உயர்ந்தமலை உச்சியிலும்
அடர்ந்தகாட்டு மத்தியிலும்
இயேசுதாமே யோசித்ததாம்
உபவாச இடத்தேர்வும்

பக்கம்வரும் இயேசுதுக்கம்
திக்கெலாமும் பங்கெடுக்கும்
மக்களோடும் காத்திருப்போம்
சுத்திகரிக்கும் இயேசுரத்தம்.

ஆதாரம் :
ஏசாயா 58:3-14
மத்தேயு 4:1,2; 6;1-6
யோவேல் 2:12-17
2 கொரிந். 7:10-11

கவிதை எண் : 216.
கவி புனைவு : மணிமுத்து.

# நீங்கள் கிறிஸ்தவரா...

அன்றியும், புருஷர்கள் கோபமும் தர்க்கமுமில்லாமல்
பரிசுத்தமான கைகளை உயர்த்தி, எல்லா இடங்களிலேயும்
ஜெபம் பண்ணவேண்டுமென்று விரும்புகிறேன். 1 தீமோத்தேயு 2:8

நன்மையெது
தீமையெது... என
அறியும் அறிவை
கர்த்தர்
மனிதருக்கு
தந்தருளினார்.
மகனே...
தன்னம்பிக்கை
நீதி, நேர்மை
உன்னிடம்
உள்ளதா...?
நாக்கு, நடத்தை
கோபம் இவைகளை
அடக்கி
ஆளமுடிகிறதா...
தைரியம், எளிமை
மென்மை இவை...
உன் இதயத்தில்
இருக்கிறதா...
அன்பு, ஆறுதல்
பாராட்டு இவை
பிறரிடம்
காட்டுவதுண்டா...?
கல்வி, மகிழ்வு
கர்த்தரிடம் பக்தி
இவைகளை
அடையவேண்டுமென்ற
ஆவல் உண்டா...?
உண்டுயெனில்
உலகை வென்றிடலாம்
கர்த்தரிடம்
சென்றிடலாம்.

பாவம் செய்யாத
மனிதரில்லை
என்பதுபோல...
கோபம் இல்லாத
மனிதருண்டா
என்ற கேள்வியும்
கூடவே எழும்
பரமபிதாவே...
அன்பே பிரதானம்
எனும்போது
அன்பின் வழியில்
செல்வோமே...
பழி பாவம் தரும்
கோபத்தை...
விட்டுவிடுவோமே...
விசயமில்லாத
விசயத்துக்காக
வாதம்... எதிர்
வாதம் தேவையா...?
நயம்பட பேசி
திறம்பட
வாழ்வதுதானே
வாழ்க்கை.
உள்ளத்தின்
உள்ளே
உறையும்
"நான் என்ற
அகங்காரத்தை"
ஒழித்துவிடு
மறந்துவிடு
அக்கணம்
பற்றின்மை - நம்மை

பற்றிக்கொண்டால்
கர்த்தரின் ஆசி
இதயத்தில்
வந்துவிட்டால் நம்
கறைபடாத கரம்
பரிசுத்தமாகும்
ஜெபம் மூலம்
தவம், தானம்
தர்மம்
மனதில் அரும்பும்
நாம் விரும்பும்
மன நிறைவும்
சந்தோஷமும்
மலரும்.
இதுதானே...
இறை இயேசு
அடியார்களிடம்
விரும்பும்
விருப்பம்
அன்பரே
சிந்தனையை
பெருக்குவோம்
எண்ணத்தை
உயர்த்துவோம்
பேச்சை
சுருக்குவோம்
செயலில்
இறங்குவோம்
கர்த்தரை வேண்டி
எல்லா இடங்களிலும்
ஜெபம் செய்வோம்
என்றுமே புகழுடன்
வாழ்வோம்.

என்றும் அன்புடன், T. ராஜ்குமார். Mens Fellowship.

# திருச்சபை ஜெபநாள் 03-03-2019 (முதல் ஞாயிறு)

"தேவனே, என் கூப்பிடுதலைக் கேட்டு,
என் விண்ணப்பத்தைக் கவனியும்." சங்கீதம் 61:1

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, "திருச்சபை ஜெபநாளில்" பங்கு பெற்றுத் தொடர்ந்து ஜெபித்துவரும் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்களுக்கும், சபையின் சார்பில் நன்றி கூறுகின்றோம். தொடர்ந்து மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும், ஜெபக் குழுக்களிலும், மற்றும் தினந்தோறும் ஜெப நேரம் ஒதுக்கி, ஜெபித்துத் திருச்சபைத் திருப்பணிகளைத் தாங்குங்கள். தேவ ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக.

## துதிகள்

- கர்த்தர் நமக்குத் தந்தருளிய சரீர சுகம், பெலம், ஜீவனுக்காக, திருச்சபை மூலமாக நாம் இம்மட்டும் பெற்றுக்கொண்ட ஐக்கியம் மற்றும் ஆன்மீக நன்மைகளுக்காக நன்றி கூறுவோம்.
- தேவன் நம் ஜெபத்தைக் கேட்டு நம் மத்தியில் பிரசன்னராயிருந்து, நம்மைத் தாங்கி பெலப்படுத்தியமைக்காக ஸ்தோத்திரம் கூறவோம்.
- கர்த்தருடைய கிருபையால் கடந்த மாதத்தில் திருச்சபையின் திருப்பணிகள், ஆராதனைகள், திருச்சபையின் இன்பச்சுற்றுலா யாவும் சிறப்பாக நடைபெற கர்த்தர் பாராட்டின தயவுகளுக்காக அவரைத் துதிப்போம்.

## திருச்சபை திருப்பணிகளுக்கான ஜெப வேண்டுதல்கள்

- நம் குருவானவர்கள், சபை ஊழியர், மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்காக, திருப்பணிகளுக்காக,
- நம் திருச்சபையின் முன்னாள் குருவானவர்கள், அவர்கள் குடும்பத்தாருக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும்,
- நம் திருச்சபைகளைச் சேர்ந்த திருச்சபையினர் அனைவருக்காகவும், ஆங்காங்கே நடைபெறும் ஆராதனைகள், ஊழியங்கள், சிறுவர், வாலிபர், ஆண்கள், பெண்கள் மத்தியில் நடைபெறும் சிறப்பு ஊழியங்கள் மற்றும் முகாம் ஊழியங்களுக்காக,
- திருச்சபை மக்களுடைய நல்லுறவு பெலப்பட ஏதுவான நம் ஆன்மீக வளர்ச்சிக்காக,
- திருச்சபையின் நிர்வாகக்குழு அங்கத்தினர்களுக்காகவும், தேவ சித்தம் நிறைவேற்றும் வகையில் அவர் தம் பணிகளுக்காகவும்,
- திருச்சபைப் பணிகளை ஜெபத்தோடு உற்சாகமாகவும், உதாரத்துவமாகவும் தாங்கி வரும் திருச்சபை மக்களுக்காக,
- சிறுவர் வேதபாடசாலைத் திருப்பணிகளில் அர்ப்பணிப்போடு பங்கு பெறும் தேவபிள்ளைகளுக்காக, பயன்பெறும் நம் குழந்தைகளின் இறைபக்திக்காக,
- நமது திருச்சபையின் ஜெபக்குழுக்களுக்காக, ஐக்கிய, ஆன்மீக வளர்ச்சிக்காக, மிஷனரி ஊழியங்களுக்காக, தாங்கும் திருச்சபை மக்களுக்காக, மற்றும் மிஷனரி ஸ்தாபனங்களுக்காக

- தென்னிந்தியத் திருச்சபைக்காக, அனைத்துப் பேராயங்கள், நமது பேராயர்கள், குருவானவர்கள், திருப்பணியாளர் அனைவருக்காகவும், திருப்பணிகளுக்காக
- கொளகூர் மாதிரி கிராமத்தில் அமைத்துள்ள மருத்துவமனை ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

## நாட்டுக்காக ஜெப வேண்டுதல்கள்

- இந்திய நாட்டுக்காக, நாட்டின் தலைவர்கள் மற்றும் அதிகாரம் வகிப்போர் அனைவருக்காகவும், தேசத்தின் வளத்துக்காகவும், வளர்ச்சிக்காகவும், மனிதநேயமும், மத நல்லிணக்கமும் பெருகவும் ஜெபிப்போம். நல்ல இயற்கைச் சூழ்நிலைகள், மழை வளத்துக்காக ஜெபிப்போம்.
- அரபு ஐக்கியக் குடியரசுக்காக, அதன் தலைவர்களுக்காக, இங்கு வாழும் அனைத்துமக்களின் சமாதானத்துக்காக,
- உலகத் தலைவர்களுக்காக, சமாதானத்துக்காக, உலகில் தேவ ஆளுகைக்காக

## நமது ஜெப மன்றாட்டுகள்

- இந்த மாதத்தில் தேவ வழிநடத்துதல்கள், தேவ ஆசீர்வாதங்களுக்காக, பாதுகாப்பு, பராமரிப்பு, சுகம், பெலம் ஆகிய தேவ கிருபைக்காக,
- நமது குடும்பங்களின் தேவைகளுக்காக, நமது பிள்ளைகளின் கல்விமுன்னேற்றம், மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்காக, வளமிகு எதிர் காலத்துக்காக,
- வேலை வாய்ப்புக்காய் காத்திருப்போருக்காக, விசா பிரச்சனைகளில் இருப்போருக்காக, சரீர சுகவீனங்களில் சிகிச்சை பெறுவோருக்காக,
- திருமணத்திற்காக தெய்வ வழிநடத்துதல் நாடுவோருக்காக, குழந்தை பாக்கியத் திற்காக ஜெபிப்போர், மற்றும் பிரசவ கால கட்டத்தில் இருப்போர் அனைவருக்கும் தேவ ஒத்தாசை, கிருபைக்காக, குடும்பங்களை விட்டுத் தனியே பணிக்காக வந்தவர்களுக்காக
- அனைத்து கல்வி, சமுதாய, மருத்துவ ஊழியங்களுக்காய் ஜெபிப்போம்
- நம் வாழ்வின் அனைத்து சூழ்நிலைகளிலும் தேவ ஆளுகை, வல்லமைக்காக, வழிநடத்துதல்களுக்காக,
- பொருளாதார நெருக்கடியினால் வேலையில் ஏற்பட்டுள்ள பிரச்சனைகள் நீங்கவும், பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருடைய தேவைகள் சந்திக்கப்படவும்,
- குடும்பங்களில், வேலையிடங்களில் மன அழுத்தத்தோடு வாழும் மக்கள் நல்வாழ்வு பெற ஜெபிப்போம்.
- உலகின், இந்தியாவின், தமிழ்நாட்டின் அரசியல் நிலை சீரடைய ஜெபிப்போம்.
- நடைபெறவுள்ள பெண்கள் ஆராதனை, தியான முகாம், விடுமுறை வேதாகம பள்ளி (VBS) ஆயத்தங்களுக்காகவும், முழு ஆண்டுத்தேர்வு எழுதும் எல்லா மாணவர்களுக்காகவும், குறிப்பாக 10வது, 12வது எழுதும் மாணவர்களுக்காகவும் ஜெபிப்போம்.

"கர்த்தாவே, என் ஜெபத்திற்குச் செவிகொடுத்து,
என் விண்ணப்பங்களின் சத்தத்தைக் கவனியும்." சங்கீதம் 86:6

நமக்கென ஓர் ஆலயம் கட்டுவதற்கான இடவசதியும், பொருளாதார தேவைகளும் சந்திக்கப்பட சபையார் தங்கள் தனி ஜெபங்களிலும், குடும்ப ஜெபங்களிலும் ஊக்கமாக தொடர்ந்து ஜெபிக்க அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

# கிருபையின் பாத்திரம்

